# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 207/2016

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 1 / LW 1 |
| Name | : Tmt. Lakshmi |
| Father/Husband's Name | : Boominathan |
| Village | : Ozhalur |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.04.2024.

**முதல் விசாரணை–**

நான் 8வது படித்துள்ளேன். ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து வீட்டில் வசித்து வருகிறார்கள். எங்கள் வீட்டில் பூ மரம் உள்ளது. மேற்படி பூ மரத்தின் கிளையை எனது கணவர் பூமிநாதன் 03.04.2016 ஞாயிற்று கிழமை அன்ற வெட்டினார். அப்போது அந்த கிளை எதிரிகளின் வீட்டின் பக்கத்தில் விழுந்தது. அப்போது முருகன், வீரமணி மற்றும் ரீட்டா என்னை பார்த்து தெவிடியா, உன்னை அடித்து போட்டாலும் கேட்க ஆள் இல்லையென்று திட்டினார். வீரமணி, முருகன், கோபி, ரீட்டா, பாபு, தமிழ் ஆகியோர்கள் என் வீட்டின் பிரன்சிங்கை உடைத்து வீட்டினுள் நுழைந்து என்னையும், என் கணவரையும் கட்டை மற்றும் ராடினால் தாக்கினார்கள்.

எனது வீட்டுகாரருக்கு இரு கைகளும் உடைந்துவிட்டன. சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு எனது கணவரை அழைத்து சென்றோம். மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலிசார் வந்து விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பெற்றனர். அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம்

என்னுடையது. (**அந்த புகார் வாக்குமூலம் அதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** தற்போது மேற்படி எதிரிகள் அனைவரும் நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளனர். போலிசார் என்னை இது சம்மந்தமாக விசாரணை செய்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

எனது கணவருக்கும் ஆஜர் எதிரி முருகனுக்கும் எந்த உறவும் இல்லை. பாபுவிற்கும், எனது கணவருக்கும் என்ன உறவு என்று தெரியாது. எனது வீட்டுக்காரரின் அப்பா பெயர் கள்ளமிட்டான். முருகன், பாபு ஆகியோரின் அப்பா பெயர் எனக்கு தெரியாது. முருகனின் தந்தை முத்து, பாபுவின் தந்தை கந்தசாமி, எனது கணவர் பூமிநாதனின் தந்தை கள்ளமிட்டான் மற்றும் அண்ணப்பன் ஆகியோர்களின் பெயரில் கூட்டு பட்டா எண்.331 உள்ளது என்றால் சரிதான். நாங்கள் வீடு கட்டியுள்ள இடம் இந்த பட்டா எண்ணில் தான் என்றால் சரிதான். எங்களுக்குள் பாகபிரிவினை செய்யப்படவில்லை என்றால் சரிதான். மமுருகன் மற்றும் பாபுவும் வெவ்வேறு குடும்பத்தை சேர்ந்தவர்கள் எனது கணவருக்கு முருகன் மற்றம் பாபு பங்காளி உறவு முறை. மேற்படி பட்டா எண்ணில் உள்ள இடத்திற்கு எதிரிகள் முருகன், பாபு மற்றும் என் கணவருக்கு பங்குண்டு.

எதிரிகள் முருகன், பாபு மற்றும் என் கணவருக்கு சொத்து பிரித்தல் சம்மந்தமாக பேச்சு வார்த்தை இல்லாமல் இருந்தது என்றால் ஆமாம். எனக்கு சொந்தமாக எங்கள் வீட்டில் பூ மரம் கிடையாது என்றும், அதன் கிளையை வெட்டி எதிரியின் வீட்டின் உள்ளே விழுந்தது போல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் ஏற்கனவே நோய்வாய் பெற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்றால் சரியல்ல.

எனது கணவருக்கு நோய் எதிர்ப்பு சக்தி இல்லையென்றும், கீழ்முடக்குவாதம் நோயால் பாதிக்கப்பட்டவர் என்றும், அதற்கு சிகிச்சை பெற்று வந்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி நோய்வாய் பட்டதினால் சாதாரணமாகவே அவருக்கு கைகளில் வீக்கம் காணப்படும் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள தேதியன்று அவர் நேரடியாக கீழே விழுந்து ஏற்பட்ட காயங்களை பயன்படுத்தி எதிரிகள் மீதுள்ள சொத்து பிரச்சனையை கணக்கில் வைத்து கொண்டு பொய்யான ஒரு புகாரினை கொடுத்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியது போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால்

சரியல்ல. போலிசார் விசாரணையில் எதிரிகள் கட்டை, ராடினால் என்னையும் எனது கணவரையும் தாக்கினார்கள் என்றும், அதனால் எனது கணவருக்கு இரண்டு கைகளும் உடைந்துவிட்ட விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் போலிஸ் விசாரணையில் மேற்சொன்னவாறு சொல்லிவில்லை என்றும், தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

அதே போல் என்னை எதிரிகள் அசிங்கமாக திட்டினார்கள் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்களது வீட்டின் பிரன்சிங்கை உடைத்தார்கள் என்ற விவரத்தை போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றும், தற்போது வழக்கை மிகைப்படுத்துவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எந்த விதமான காயமும் ஏற்படவில்லை என்றும், எதிரிகள் என்னை தாக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மருத்துவமனையில் போலிசார் எவ்வித புகார் வாக்குமூலத்தையும் பெறவில்லை என்றால் சரியல்ல. இந்த புகார் வாக்குமூலம் வழக்கிற்காக பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R. D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 207/2016**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 2 / LW 2 |
| Name | : Tr. Boominathan |
| Father/Husband's Name | : Kallamittan |
| Village | : Ozhalur |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.04.2024.

**முதல் விசாரணை–**

நான் ஒழலூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் வளச்சரவாக்கத்தில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் ஆப்பரேட்டராக வேலை செய்து வருகிறேன். அசா 1 எனது மனைவி. ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். 03.04.2016 பகல் 01.00 மணியளவில், எங்கள் வீட்டு மரத்தினை வெட்டியதால் அதன் கிளை ஒன்று அவரது வீட்டினுள்ளே விழுந்தது. அதனால் ஆஜரில் உள்ள வீரமணி என்பவர் என்னை பார்த்து தெவிடியா பையா, ஏண்டா எங்கள் வீட்டினுள் கிளையை போட்டீங்க என்று அசிங்கமாக திட்டினார். அதன் பிறகு ஆஜரில் உள்ள எதிரிகள் அனைவரும் எனது வீட்டின் காம்பவுண்ட் மற்றும் கேட்டினை உடைத்து வீட்டினுள் வந்து என்னை கட்டை, கல், கம்பி ஆகியவற்றை கொண்டு என்னை தாக்கினார்கள்.

அதனால் எனக்கு இரு கைகளும் உடைந்துவிட்டன மேலும் எனது முன்பல்லும் உடைக்கப்பட்டது. எனது தலையில் காயம் ஏற்பட்டு 6 தையல்கள் போடப்பட்டது. ரீட்டா என்பவர் என் மனைவியின் தலை முடியை பிடித்து இழுத்து கீழே தள்ளினார்.

மேலும் அவரை காலால் எட்டி எட்டி உதைத்தார். மேற்படி முருகன் என்பவர் என்னையும் என் மனைவியையும் கல்லை கொண்டு சாகடிக்க வேண்டியது தானே என்று மிரட்டியதாக நான் கேள்விப்பட்டேன். பிறகு நான் சிகிச்சைக்காக செங்கல்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

ஆஜர் எதிரிகள் எனக்கு பங்காளி உறவுமுறை என்றால் தெரியாது. எனது அப்பா, முருகன் அப்பா, பாபு அப்பா மற்றும் அன்னப்பன் ஆகியோர்கள் பங்காளி முறையில் உறவுக்காரர்கள் என்றால் சரிதான். இவர்கள் 4 பேர்களிலும் கூட்டு பட்டா உள்ளது என்றால் சரிதான். அந்த பட்டா எண்ணில் தான் எங்கள் வீடுள்ளது என்றால் சரியல்ல. அந்த கூட்டு பட்டாவில் உள்ள இடத்தினை முறையாக பாகபிரிவினை செய்யப்பட்டதா என்றால் இல்லை. அன்னப்பனுக்கு சேரவேண்டிய பாகத்தை நான் அபகரித்த காரணத்தினால் அவரின் மகன்கள் என்னை சண்டை செய்தனர் என்றால் சரிதான். எனக்கு நோய்எதிர்ப்பு சக்தி இல்லையென்றும் அதற்காக நான் சிகிச்சை பெற்று வருகிறேன் என்றால் சரியல்ல.

என் வீட்டில் பூ மரம் இல்லையென்றும் அதை யாரும் வெட்டவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் வீரமணி என்னை பார்த்து தெவிடியா பையா உன்னை வெட்டினால் கேட்க யாரும் இல்லை என்ற விவரத்தை போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றும் தற்பொழுது வழக்கை மிகைப்படுத்துவதற்காக முதல் முறையாக இந்நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் ஆஜரில் உள்ள எதிரிகள் அனைவரும் எனது வீட்டின் காம்பவுண்ட் மற்றும் கேட்டினை உடைத்து வீட்டினுள் வந்து என்னை கட்டை, கல், கம்பி ஆகியவற்றை கொண்டு என்னை தாக்கினார்கள் என்றும், அதனால் எனக்கு இரு கைகளும் உடைந்துவிட்டன என்று போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். அவ்வாறு எனக்கு எந்த காயமும் எற்படவில்லை என்றால் சரியல்ல.

அதே போல் ரீட்டா என்பவர் என் மனைவியில் தலைமுடியை பிடித்து கீழே தள்ளினார் என்றும், காலால் எட்டி உதைத்தார் என்றும் முதல் விசாரணையில்

சொல்லியுள்ள விவரத்தை போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றும் தற்பொழுது நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளன்று கீழே விழுந்து அடிப்பட்டதை கருத்தில் கொண்டு எதிரிகளுக்கும், எங்களுக்கும் உள்ள சொத்து பிரச்சனையை மனதில் வைத்து கொண்டு எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக புகாரினை கொடுதது அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லையென்றால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R. D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.